# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# பதவி வெற்றிடம்

## பராமரிப்புப் பொறியியலாளர்
## (POST OF MAINTENANCE ENGINEER)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்** : 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பொறிமுறை/ மின்சார பொறியியலில் B.Sc பட்டம் மற்றும் IESL சான்றிதழ் / ECSL அங்கத்துவம்

**அல்லது**

2. NDT சகிதம் இயைபுடைய துறையில் 05 வருடங்கள் அனுபவம்

**அனுபவம்** : இயைபுடைய துறையில் முன் அனுபவம்.

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புத் தகைமை மேலதிக அனுகூலமாகும்.

**வயது** : 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : SL 1 - தரம் III

ரூபா 110,720 – 10 x 3230 – 143,020/- மாதாந்தம்.

மேற்படி சம்பளத்திற்கு மேலதிகமாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சகல கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்** : 1ஆம் இலக்க தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

1ஆம் இலக்க தகைமையின் கீழ் விண்ணப்பதாரர்கள் இல்லாத நிலையில், 2ஆம் இலக்க தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வேட்பாளர்கள் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு உள்நாட்டுப் பயிற்சி அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேலையில் அமர்த்தப்படலாம் என்பதுடன் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நியாயமான கொடுப்பனவு / சம்பள அளவைப் பெற உரித்துடையவர்களாவர்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம்.

விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும்/ வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் 2025-07-28ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**